**நேர்முக உதவியாளர் (பொது), முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15 அவர்களின் செயல்முறை ஆணை**

**செ.மு.ஆணை எண் எம்.3/2398/2012** **நாள். 21.01.2014**

பொருள்: பணியமைப்பு - வனத்துறை - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு. எஸ்.கே.ஏகாம்பரம், வனக்காப்பாளரின் மகள் செல்வி. ஏ. ரேவதி, தற்காலிக தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டது - தற்காலிக தட்டச்சர் பணியினை பணிவரன்முறை செய்தல் - தொடர்பாக

பார்வை:
1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண் எம்3/2398/2012 நாள்: 19.01.2012.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்), சென்னை-15 கடித எண் எம்3/2398/2012 நாள். 03.04.2013.
3. அரசாணை (3டி) எண்.77, சுற்றுச்சூழல் - வனத்(வ9)துறை நாள் 12.12.2013.

******

**ஆணை**

பார்வை (1)ல் காணும் கடிதத்தில் திருவண்ணாமலை வனக்கோட்டத்தில் திரு.எஸ்.கே.ஏகாம்பரம், வனக்காப்பாளராக பணிபுரிந்த போது 13.08.2008 அன்று இறந்து விட்டதால் அவரது மகள் ஏ.ரேவதி, என்பவரை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) அலுவலகத்திற்கு கருணை அடிப்படையில் வனத்துறையில் தற்காலிக தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டார். இவர் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் 19.01.2012 முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்து கொண்டார். பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி, செல்வி. ஏ.ரேவதி, தட்டச்சருக்கு பணி வரன்முறை செய்ய அரசுக்கு அனுப்பப்பட்டது. பார்வை 3ல் காணும் அரசாணையின்படி, செல்வி. ஏ.ரேவதி, என்பவர் தற்காலிக தட்டச்சராக சேர்ந்த நாளான 19.01.2012 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 23 (a)ன் படி தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

| பெயர் | பதவி | பணிவரன்முறைப் படுத்தப்பட்ட நாள் | தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| செல்வி. ஏ. ரேவதி, | தட்டச்சர் | 19.01.2012 (மு.ப) | 19.01.2012 (மு.ப) |

நேர்முக உதவியாளர் (பொது)

**பெறுநர்.**
செல்வி. ஏ. ரேவதி, தட்டச்சர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம், சென்னை - 15.

நகல். வனப்பாதுகாவலர், (திட்டம் மற்றும் வளர்ச்சி) சென்னை-15

நகல். சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (தெற்கு) சென்னை-35.

நகல் - "ண1" பிரிவு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம், சென்னை - 15.

நகல்: பணிப்பதிவேடு / எம்3 இருப்புக்கோப்பு.